

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.08.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கருவூலக் கணக்குத் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 537 நபர்களுக்கும், கருவூலக் கணக்குத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந் நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ்.நாகராஜன், கருவூலக் கணக்கு ஆணையர் கிருஷ்ணனுன்னி ஆகியோர் உள்ளனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்களிடம் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா ஆகியோர் வழங்கிய காட்சி.

### முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் முன்னோடி முயற்சிகள்

# நமது வளர்ச்சிக்கு வழிகாட்டியாக உள்ளன!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, ஆக, 21 - முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி அவர்களின் முன்னோடி முயற்சிகள் நமது வளர்ச்சிக்குத் தொடர்ந்து வழிகாட்டியாக விளங்கி வருவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இது தொடர்பாக முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களின் 80ஆவது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களின் 80ஆவது பிறந்தநாளில், அவர் நம் நாட்டுக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்புகளை நினைவுகூர்கிறோம்.

நவீன, தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற அவரது கனவும், அதற்கான அவரது முன்னோடி முயற்சிகளும் நமது வளர்ச்சிக்குத் தொடர்ந்து வழிகாட்டியாக விளங்கி வருகின்றன.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில்

# 1474 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 21 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 946 மருந்தாளுநர்கள், 523 உதவியாளர்கள் மற்றும் 5 தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணை களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக மருந்தாளுநர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 946 நபர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைத்தின் மூலமாக உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 523 நபர்கள் மற்றும் தொழில் வழிகாட்டி ஆலோசகர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 5 நபர்கள், என மொத்தம் 1474 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48", சுகாதார நடைபாதை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இது நாள் வரை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 1947 உதவி மருத்துவர்கள், 1291 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதே போன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக 628 இளநிலை உதவியாளர், 158 தட்டச்சர், 220 சுரு க்கெழுத்துதட்டச்சர், 12 சுகாதார அலுவலர், 30 கணிணி இயக்குபவர் மற்றும் தடுப்பூசி பண்டக காப்பாளர், 5 கணினி இயக்குபவர், 1 புள்ளி விவர தொகுப்பாளர், 1 மக்கள் திரள் பேட்டியாளர் என்று மொத்தம் 4293 பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**946 மருந்தாளுநர்கள் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலகின் கீழ் செயல்படும் இயக்ககங்களில் காலியாகவுள்ள 946 மருந்தாளுநர்கள் பணியிடங்களுக்கான தேவைப் பட்டியல் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்தாளுநர்களுக்கு அரசின் அறிவுறுத்தலின்படி உரிய கலந்தாய்வு 13.08.2024 அன்று நடத்தப்பட்டது. அக்கலந்தாய்வின் மூலம் அவர்கள் விரும்பிய இடங்கள் தேர்ந்தெடுத்து அதன்மூலம் 946 மருந்தாளுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 3 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**523 உதவியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-19 முதல் 2022-23 வரையிலான காலத்திற்கான காலி பணியிட மதிப்பீட்டு அறிவிப்பின்படி தெரிவு செய்யப்பட்ட 523 உதவியாளர் பணியிடத்திற்கு 17.08.2024 அன்று கலந்தாய்வு நடத்தப்பட்டது. அக்கலந்தாய்வு மூலம் அவர்கள் விரும்பிய இடங்கள் தேர்ந்தெடுத்து பணிநியமனம் செய்யப்பட்ட 523 உதவியாளர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**5 தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள் (Vocational Counsellor) பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

கல்வி, வாழ்க்கைத் தொழில், தனியர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆலோசனையும், வழிகாட்டுதல்களையும் வழங்குதல், பள்ளி, கல்லூரிகளில் உள்ள தொழில் வழிகாட்டி ஆசிரியர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல், வழிகாட்டப்பட வேண்டியவர்களின் நுண்ணறிவு, உளச்சார்பு, ஈடுபாடு மற்றும் ஆளுமை குணங்கள் ஆகியவற்றினை கணிக்கும் உளவியல் தேர்வினை நடத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 5 தொழில் வழிகாட்டி ஆலோசகர்களுக்கு (Vocational Counsellor) பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆலோசகருக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார்.

ஆலோசகர் பணியிடத்திற்கு உளவியல் முதுகலை பட்டம் / வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையில் முதுநிலை பட்டயம்/வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையில் பட்டயப்படிப்பு படித்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்புதிய ஆலோசகர்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு புனர்வாழ்வு மற்றும் மருத்துவ நிலையத்தில் பணிபுரிவர்.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, குடும்ப நல இயக்குநர் (பொறுப்பு) மருத்துவர் சித்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி

# திருப்பத்தூர் நகரில் நன்றி அறிவிப்பு!

### சி.என்.அண்ணாதுரை எம்.பி. பங்கேற்றார்! மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. தலைமை!

திருப்பத்தூர், ஆக. 21 - திருப்பத்தூர் நகர பகுதிகளில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி. என். அண்ணாதுரை எம்.பி. வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

திருப்பத்தூர் நகர செயலாளர், மாவட்ட ஆவின் தலைவர் எஸ்.ராஜேந்திரன்,

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.கே. மோகன், ஆ.சம்பத்குமார், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர்.ஜோதிராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சத்தியமூர்த்தி,

பொதுக்குழு உறுப்பினர்கள் சு.அரசு, டி.ரகுநாத், திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கிதாவெங்கடேசன், நகர மன்றதுணைத்தலைவர் ஏ.ஆர்.சபியுல்லா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சார்லஸ் நவீன்குமார், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் சரவணன் மற்றும் நகர கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### துக்ளக் நிறுவனர்

# சோ ராமசாமியின் மனைவி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக, 21 - 'துக்ளக்' நிறுவனரும் மூத்த பத்திரிகையாளருமான சோ இராமசாமி அவர்களின் மனைவி திருமதி சௌந்திரா ராமசாமி அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

துக்ளக் நிறுவனரும் மறைந்த மூத்த பத்திரிகையாளருமான சோ ராமசாமி அவர்களின் மனைவி திருமதி. சௌந்தரா ராமசாமி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

துக்ளக் நிறுவனரும் அப்பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து மறைந்த மூத்த பத்திரிகையாளர் சோ ராமசாமி அவர்களின் மனைவி திருமதி. சௌந்தரா ராமசாமி அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகுந்த வருத்தமடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோ அவர்கள் தனது வாழ்நாளில் பத்திரிகை உலகிலும், திரைத்துறை மற்றும் பொது வாழ்விலும் தனி முத்திரை பதித்ததற்கு உற்ற துணையாக இருந்த திருமதி. சௌந்தரா ராமசாமி அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### பாளையங்கோட்டையில் மரக்கிளைகளை வெட்டும் போது தவறி விழுந்து உயிரிழந்த

# தூய்மைப் பணியாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின்அறிவிப்பு!

சென்னை, ஆக. 21 - திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல வரிவசூல் மைய கட்டடித்தில் மரக்கிளைகளை வெட்டும்போது தவறி விழுந்து உயிரிழந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல சாந்திநகர் வரிவசூல் மைய கட்டிடத்தில் கடந்த 09.08.2024 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் அன்னை இந்திரா சுயஉதவிக்குழுவின் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த பாலசுப்பிரமணியன் (வயது 24) த/பெ. முனீஸ்வரன் என்பவர் மரக்கிளைகளை வெட்டும்போது எதிர்பாராதவிதமாக மரத்திலிருந்து தவறி விழுந்து தலையில் பலத்த காயத்துடன் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் மதுரையிலுள்ள தனியார் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் 18.08.2024 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)2/2024 நாள் : 19.08.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 32, 48, 70, 80 மற்றும் 82-க்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால், கான்கிரீட் தளம், கட்டிட பணி, தூர்வாருதல் மராமத்து பணி, அபிவிருத்தி பணி மற்றும் பாதாள சாக்கடை பணிகள் | 10 பணிகள் | 29.08.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 30.08.2024 பிற்பகல் 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

உதவி ஆணையாளர், மத்திய மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 433/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 20.08.2024




விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் 253 வது நினைவு நாளை முன்னிட்டு அரசு சார்பில் பாளையங்கோட்டை நீதிமன்றம் எதிரில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்கள் திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் கழக துணை பொது செயலாளர் நாடாளுமன்ற கழக குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், மேயர் ராமகிருஷ்ணன், அப்துல்வகாப் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் சுப்பிரமணியன், ரூபி மனோகரன் எம்.எல்.ஏ. முன்னாள் எம்.பி.விஜிலா சத்யானந்த், பேச்சிபாண்டியன், கணேஷ் குமார் ஆதித்தன், ஜெகதீஷ், செல்வக் கருணாநிதி, வேலங்குளம் கண்ணன், ஜோசப் பெல்சி, துணை மேயர் ராஜ், முன்னாள் மேயர் சரவணன், அன்டன் செல்லத்துரை உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 மண்டலக்குழு மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் குரோம்பேட்டையில் உள்ள மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 4.11 கோடிமதிப்பீட்டில் 22 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அப்பொழுது மாநகராட்சி இணை ஆணையர் நாராயணன், செயற்பொறியாளர் ஞானவேல் ராஜன் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் பொறியாளர்கள் சுகாதார அலுவலர் உள்ளிட்டோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.